## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 13/2024 | Date : 27.03.2026 | PW 1 |
|---|---|---|
| Name: கந்தசாமி | த/பெ. சின்னகந்தன் சேவி | |

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் எனது சகோதரர் என்றால் சரிதான். 2 ம் மனுதாரர் எனது சகோதரர் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இறந்து போன எனது சகோதரரின் பெயர் சின்னசாமி. அவருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான்தான் போலிசில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதில் பாரா 7 யில் அடையாளம் தெரியாத வாகனம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தை நான் கேள்விப்பட்டு போய் பார்த்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தது 28.01.2021 என்றால் சரிதான். 14.2.2024 யில் நான் விபத்து நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்ததால் காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்தியதாக கூறும் வாகனத்திற்கு விபத்து காலத்தில் தகுதி சான்று இல்லாததால் 2 ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இறந்து போன எனது சகோதரரின் வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை காட்ட ஆதரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தம்பி இறந்துபோன சின்னசாமி எங்களுடன் தான் வாழ்ந்துவந்தார். மனுதாரர்கள் இருவரும் தனிதனியாக வாழ்நது வருகிறோம் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/—கந்தசாமி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/—ஆர்.சரவணபாபு
சார்பு நீதிபதி,
மேட்டூர்.